*(வலைப்பின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# *1999 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க,* இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தச்) சட்டம்

---

(1999, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1999, ஒற்றோபர் மாதம் 08 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 4.00** **தபாற் செலவு : ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தச்) சட்டம்**

[*1999, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச.வ.—ஓ. 62/98*
*4502*

**1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :*

*சுருக்கப்பெயர்.*

**1.** *இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** *(இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—*

"*(ஆஆ) எவரேனும் தனியாளுக்கு —*

(i) *வதியும் வீடொன்றின் நிர்மாணத்திற்காக ஏதேனும் காணியின் கொள்வனவுக்கு அல்லது குத்தகைக்கு ;*

(ii) *வதியும் வீடொன்றின் நிர்மாணத்திற்கு, அதனைப் பழுதுபார்ப்பதற்கு, புதுப்பிப்பதற்கு அல்லது விசாலிப்பதற்கு ;*

(iii) *வதியும் வீடொன்றின் கொள்வனவுக்கு அல்லது குத்தகைக்கு ;*

(iv) *உட்பந்தி* (i), (ii) *அல்லது* (iii) *இல் குறிப்பிடப்பட்ட எவையேனும் நோக்கங்களுக்கு இடை நேர் விளைவான, துணைநிலையான அல்லது உதவியான ஏதேனும் நோக்கத்திற்கு ;*

(v) *உட்பந்தி* (i), (ii), (iii) *அல்லது* (iv) *இல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் நோக்கத்திற்காக ஏற்கனவே உறப்பட்ட ஏதேனும் தனிசைத் தீர்ப்பதற்கு,*

*கடன்களையும் முற்பணங்களையும் வழங்குவதற்கான தத்துவம் ;*".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

"(1)பணிப்பாளர் சபை, இச்சட்டத்தின்கீழ் அதன் பொறுப்புகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு ஆண்டொன்றில் ஆகக்குறைந்தது பத்துத் தடவைகளும் ஒவ்வொரு காலாண்டிலும் ஆகக்குறைந்தது இரண்டு தடவைகளும் கூடுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) வங்கியின் இலச்சினை பொதுமுகாமையாளரினதும் அல்லது பதில் பொதுமுகாமையாளரினதும் அல்லது பிரதிப் பொதுமுகாமையாளரினதும் அல்லது உதவிப் பொதுமுகாமையாளரினதும் அத்துடன் பணிப்பாளர் ஒருவரினதும் முன்னிலையிலன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்கள் இருவரும் தாங்கள் சமூகமாயிருந்ததற்கு அடையாளமாக கையொப்பமிடுதல் வேண்டும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*